

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (17.08.2024) சென்னை, காவேரி மருத்துவமனை மற்றும் வடசென்னை ரோட்டரி சங்கம் மற்றும் பேஃபோர்ஜ் இணைந்து நடத்தும் ரூ.50 இலட்சம் மதிப்பிலான ECG, எக்கோ, Xray. BMD Scanner ஆகிய வசதிகளுடன் பொது மருத்துவம், நீரிழிவியல், இருதயவியல், புற்றுநோய், நரம்பியல் முதலான பன்னோக்கு துறை வசதிகள் கொண்ட கிராமப்புற மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பான சேவை வழங்கும் நடமாடும் மருத்துவ வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, காவேரி மருத்துவமனை இயக்குநர் மரு.அரவிந்தன் செல்வராஜ், ரோட்டரி சங்க தலைவர் மரு. சதிஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சரித்திரம் அவர்! சகாப்தம் அவர்! முத்தமிழறிஞர்

# கலைஞருக்கு நினைவு நாணயம் மட்டுமல்ல -இந்தியாவின் உயர் விருதுகள் அனைத்தும் வழங்கப்பெற வேண்டும்!

## நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி ஓவியம் அறிக்கை!



சென்னை, ஆக.18-

சரித்திரமாகவும், சகாப்தமாகவும் திகழும் முத்தமிழறிஞர், தமிழினத் தலைவர் கலைஞருக்கு நூற்றாண்டு நினைவு நாணயம் மட்டுமல்ல, இந்தியாவின் உயர் விருதுகள் அனைத்தும் வழங்கப்பெற வேண்டும் என நமது திராவிட இயக்க நிறுவனத் தலைவர் திருமதி. ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் அவர்கள் பெரியார் பாதி, அண்ணா பாதி என்று இந்த உலகமே போற்றும் திராவிட தலைவர் ஆவார். காவேரி கூட்டு குடிநீர் திட்டத்தில் நீர் மேலாண்மை, சேது சமுத்திர திட்டத்தில் வணிக மேலாண்மை, மேம்பாலங்கள், சாலைகளால் போக்குவரத்து மேலாண்மை, விவசாய கடன் தள்ளுபடி, மருத்துவ காப்பீட்டில் மக்கள் நல வாழ்வு மேலாண்மை, தேர்தல் வெற்றி எனும் அரசியல் மேலாண்மை என தமிழக மக்களுக்காக உழைத்த உன்னத தலைவர். இனி யாரும் கலைஞர் போல் பிறக்க போவதும் இல்லை. இனி பிறக்கப் போகின்றவர்களும் தலைவரை நினைக்காமல் இருக்கப் போவதுமில்லை.

உள் எண்ணத்தின் சிறப்பை பேனா மையில் ஊன்றிய என் கலைஞரே, தமிழ் மொழி வளர்ச்சிக்கு தொழில் நுட்பம் புகுத்தியவர். தொல்காப்பிய பூங்கா, நூற்றாண்டு நூலகம் கொணர்ந்தவர். திராவிட கொள்கையை உயர்த்தி ஏங்கும் உள்ளங்களில் ஒளி தீபமாய் நிற்கும் எங்கள் கலைஞரே, தமிழுக்கு தவப்புதல்வன் நீ, கடிகார முள்ளாய் ஓயாது உழைத்தாய், தமிழகத்தின் வளர்ச்சிக்கு நாளும் வித்திட்டாய்.

செம்மொழியின் நறுமண நாயகனே உங்கள் சுவிதிறனும், குறள் ஒலியும் புவி உள்ள வரை மாறாது, மறையாது. கருணாநிதி என்ற உன் பெயரில் கரு, திரு, கருணை, குணம், நீதி என்ற வாழ்வியல் தேடல் கொண்ட வாக்கியம் அதை உண்மையாக்கி பகிர்ந்து வாழ்வதே எங்கள் பாக்கியம். விதவைக்கு இரு பொட்டு வைத்து கைம்பெண்ணாக்கி மறுமலர்ச்சி தந்த தலைவனே.

திருநங்கை என்று திருநாமம் சூட்டிய மனுநீதியே.

ஊனமுற்றோர் என்ற சொல் சுடுவதாக உள்ளது என்று மாற்றுத்திறனாளி என்று அழைத்த மறுமலர்ச்சி நாயகனே உங்களுக்கு நினைவு நாணயம் மட்டும் அல்ல இன்னும் பல இந்திய நாட்டில் உள்ள உயர் விருதுகளை பெற வேண்டும், தர வேண்டும் ஏனென்றால் நீங்கள் தமிழர்களுக்கு தந்தை அல்லவா.

சூரியன் என்றும் இறப்பதும் இல்லை, மறைவதும் இல்லை. வாழ்க கலைஞர், வாழ்க தளபதி, வாழ்க இளைய தளபதி.

இவ்வாறு திருமதி ஓவியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### பி.டி.பாண்டிச்செல்வம் தலைமை! ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. - தா.இளைய அருணா முன்னிலை! ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# இராயபுரத்தில் கருத்தரங்கம் - ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைக்கிறார்!

## நாஞ்சில் சம்பத் - ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. - காசி முத்துமாணிக்கம் - கலாநிதி வீராசாமி எம்.பி. சிறப்புரை!

சென்னை, ஆக.18-

தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் 'ஒன்றிய அரசின் ஓரவஞ்சனை பட்ஜெட், வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகின்றது.

இக்கருத்தரங்கம் இன்று (18.8.2024, திங்கட்கிழமை) மாலை சரியாக 6 மணிக்கு இராயபுரம், அறிவகம் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இக் கருத்தரங்கிற்கு தி.மு.க. வர்த்தகர் அணி இணைச் செயலாளர் பி.டி. பாண்டிச் செல்வம் தலைமை வகிக்கிறார். ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., தா.இளைய அருணா, இரா.மதிவாணன், இரா. செந்தில்குமார், வ.பெ. சுரேஷ், வே.சிவக்குமார், வி.பி.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

என்.சிவக்குமார், கூல் பி.பிரகாஷ், லயன் தியாகராஜன், வி.வி.தங்கராஜ், கே.அசோக், மணிகண்டன், பொன்ராஜ், எம். ஆர்.எப்.துரைராஜ், ஆர். வி.கணேஷ், என்.கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

கருத்தரங்கை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைக்கிறார்.

நாஞ்சில் சம்பத் சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., ந. மனோகரன், இரா.நரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசுகின்றனர்.

இதில் ஆர்.வெற்றிவீரன், நாகம்மை, மு.கோபி, கமலக்கண்ணன், நா.சண்முகம், ராஜேந்திரன், கமல், சோமசுந்தரமூர்த்தி, லயோலா மதன், லியோ சுரேஷ், லயன் தீனதயாளன், கோவிந்தசாமி, ரமேஷ்பாபு, காணிக்கை நாதன், கார்த்திக் செங்குட்டுவன், லட்சுமிவேலு, பா.கதிரவன், லெனின், குருவம்மாள், வேளாங்கண்ணி, எஸ்.மணிகண்டன், எம்.பிரேம்குமார், ஜெ.தினேஷ்குமார், என். டி.சேகர், ஆர்.டி.கார்த்தக், அரிராமன், தமிழ்ச்செல்வன், எம்.ஆர்.பி.பழனி, எஸ்.சுப்பிரமணி, த.ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், ஜெயலட்சுமி, லோ. மோகன், சீனிவாசன், காட்டன்சதீஷ், ஆறு.ஆறுமுகம், பி.கண்ணன், இஸ்மாயில், கு.ரமேஷ், திருஞானம், மதன், மாலையம்மாள், இரா.பாலன், எஸ்.புகழேந்தி, கௌரீஸ்வரன், ரவி, கொரியர் முருகன், பாலா, லட்சுமணன், க.கலைச்செல்வன், குமார், அத்தோ முனுசாமி, எஸ். சுரேஷ், எம்.என்.வெங்கட், ஐ.சி.எப்.பழனி, என். பாரி, கே.லட்சுமணன், மற்றும் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# அணிகளின் அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



திருவள்ளூர், ஆக. 18 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக அணிகளின் நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம் வருகிற 19.08.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் கவரைப்பேட்டை, டி.ஜெ.எஸ். லட்சுமி திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெறுகிறது. மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி எம்.எல்.ரவி எஸ்.ரமேஷ் முன்னிலை வகிக்கின்றனர். கும்முடிப்பூண்டி தெற்கு ஒன்றிய செயலாளர் கி.வே.ஆனந்தகுமார் வரவேற்புரை. மாநில நிர்வாகிகள் க.சுந்தரம் இ.ஏ.பி.சிவாஜி சி.எச். சேகர் ஜெ.மூர்த்தி கே.ஜி. பாஸ்கர்சுந்தரம் வெ.அன்புவாணன் ஜி.ஸ்டாலின் ஏ.ஆர்.டி. உதயசூரியன் பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி பா.செ.குணசேகரன் பி.வெங்கடாசலபதி கே.சுப்பிரமணி டாக்டர் பரிமளம் விஸ்வநாதன் ஆகியோர் பங்கேற்கின்றனர். கூட்டத்தில் ஒன்றியச் செயலாளர்கள் மு.மணி பாலன், டி.கே.சந்திரசேகர், பா.சுகுமாறன், எம். எஸ்.கே.ரமேஷ்ராஜ், நா. செல்வசேகரன், ஆ.சத்தியவேலு, கா.சு.ஜெகதீசன், ஜான்(எ) பொன்னுசாமி, ந.பரிமளம் நகரச் செயலாளர் ஜி.ரவிகுமார், பேரூர் செயலாளர்கள் இரா.அறிவழகன், அபிராமி குமரவேல், பி.முத்து க.சு.தமிழ் உதயன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

கூட்டத்திற்கு வருகை தரும் அணிகளின் அமைப்பாளர்கள் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் முன்னிட்டு அணிகள் சார்பில் நிகழ்ச்சிகள் நலத்திட்ட உதவிகள் நடத்தியதற்கான பிரசுரங்கள் அடங்கிய மினிட் புத்தகத்தை (நிகழ்வு குறிப்பேடு) அவசியம் கொண்டு வரவேண்டும் கீழ்க் குறிபிட்ட நாட்களில் அட்டவணைப்படி அணிகளின் நிர்வாகிகள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடைபெறும்.

நாள்: 19.08.2024 திங்கட்கிழமை

காலை : 11.00 மணி இளைஞர் அணி, காலை : 11.30 மணி மாணவர் அணி, நண்பகல் : 12.00 மணி தகவல் தொழில் நுட்ப அணி, நண்பகல் : 12.30 மணி ஆதிதிராவிடர் நல அணி, நண்பகல் : 01.00 மணி விவசாய அணி, பிற்பகல் : 03.00 மணி மகளிர் அணி, பிற்பகல் : 03.30 மணி மகளிர் தொண்டர் அணி, மாலை : 04.00 மணி விவசாய தொழிலாளர் அணி.

நாள்: 20.08.2024 செவ்வாய்கிழமை

காலை : 10.00 மணி - அமைப்புசாரா ஓட்டுநர் அணி, காலை : 10.30 மணி- கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி, காலை : 11.00 மணி - பொறியாளர் அணி, காலை : 11.30 மணி - இலக்கிய அணி, நண்பகல் : 12.00 மணி - சிறுபான்மை நல உரிமை அணி, நண்பகல் : 12.30 மணி - நெசவாளர் அணி, நண்பகல் : 01.00 மணி - வர்த்தகர் அணி, பிற்பகல் : 03.00 மணி - மருத்துவ அணி, பிற்பகல்: : 03.30 மணி - விளையாட்டுமேம்பாட்டு அணி, மாலை : 04.00 மணி - சுற்றுச்சூழல் அணி, மாலை : 04.30 மணி - மீனவர் அணி, மாலை : 05.00 மணி - தொண்டர் அணி, மாலை : 05.30 மணி - தொழிலாளர் அணி, மாலை : 06.00 மணி - வழக்கறிஞர் அணி, மாலை : 06.30 மணி - அயலக அணி.

மேற்கண்ட அணிகளின் தலைவர்கள் துணைத் தலைவர்கள் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் தவறாமல் ஆய்வுகூட்டத்தில் பங்கேற்கவேண்டுகிறேன்.

இவ்வாறு டி.ஜெ. கோவிந்தராஜன் அறிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில்

# மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத்தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்ட அறிவிப்பின்படி கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கழகத்தின் பவள விழா, முப்பெரும்விழா 2026 தேர்தல்பணி சம்பந்தமாக, காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில், மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் வாரியாக கீழ்க்கண்ட அட்டவணைப்படி பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

| நாள் & நேரம் | மாநகரம் / ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் |
|---|---|---|
| 20-08-2024 காலை 11.00 மணி | காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியம் | AJS திருமண மண்டபம் கீழம்பி |
| 23-08-2024 காலை 10.00 மணி | சித்தாமூர் மேற்கு | சக்கரா மண்டபம் கீழ்மருவத்தூர் |
| 24-08-2024 காலை 9.00 மணி | இடைக்கழிநாடு பேரூர் | Medway Mahal, கிளாம்பூர் ECR |
| காலை 11.00 மணி | சித்தாமூர் கிழக்கு | சாய்ராம் திருமண மண்டபம் மண்டபம் ECR கொளத்தூர் |
| 25-08-2024 காலை 10.00 மணி | லத்தூர் தெற்கு | KS மஹால் செய்யூர் |
| காலை 12.00 மணி | மதுராந்தகம் நகரம் | AK திருமண மண்டபம் |
| காலை 2.00 மணி | சாலவாக்கம் ஒன்றியம் | சமுதாய கூடம், பொற்பந்தல் |
| 26-08-2024 காலை 9.00 மணி | லத்தூர் வடக்கு | NKP மஹால் காத்தான்கடை |
| 27-08-2024 காலை 9.00 மணி | திருக்கழுக்குன்றம் தெற்கு | VM மஹால், இளையனார்குப்பம் |
| காலை 12.00 மணி | கருங்குழி பேரூர் | DRR மகால் கருங்குழி |
| 01-09-2024 காலை 9.00 மணி | அச்சரப்பாக்கம் தெற்கு | ஈஸ்வர் மஹால் கடமலைபுத்தூர் |
| காலை 11.00 மணி | அச்சரப்பாக்கம் வடக்கு | RVR மஹால், ராயபுரம் |
| 02-09-2024 காலை 10.00 மணி | வாலாஜாபாத் வடக்கு | வீனஸ் கார்டன் பரந்தூர் |
| 03-09-2024 காலை 9.00 மணி | வாலாஜாபாத் தெற்கு & பேரூர் | உமாசேகர் திருமண மண்டபம், வாலாஜாபாத் |
| காலை 11.00 மணி | காஞ்சிபுரம் தெற்கு | அழகர் மஹால், ஆற்பாக்கம் |
| 04-09-2024 காலை 9.00 மணி | மதுராந்தகம் தெற்கு | AK திருமண மண்டபம், மதுராந்தகம் |
| காலை 11.00 மணி | அச்சரப்பாக்கம் பேரூர் | SMJ திருமண மண்டபம் அச்சரப்பாக்கம் |
| காலை 12.00 மணி | மதுராந்தகம் வடக்கு | ராஜ் மஹால், சாலவாக்கம் கூட்ரோடு |
| 09-09-2024 காலை 9.00 மணி | பகுதி -I காஞ்சிபுரம் நகரம் | கோகுலம் திருமணமண்டபம், பூக்கடைசத்திரம், காஞ்சிபுரம் |
| காலை 11.00 மணி | பகுதி -II காஞ்சிபுரம் நகரம் | கலைவாணி திருமணமண்டபம், டோல்கேட், காஞ்சிபுரம் |
| பிற்பகல் 2.00 மணி | பகுதி -III காஞ்சிபுரம் நகரம் | சாய்மனோன்மணி மண்டபம், அரசு நகர், காஞ்சிபரம். |
| மாலை 4.00 மணி | பகுதி -IV காஞ்சிபுரம் நகரம் | சக்திவேல் திருமணமண்டபம், பி.பாளையம், காஞ்சிபுரம் |
| 10-09-2024 காலை 9.00 மணி | உத்திரமேரூர் ஒன்றியம்/பேரூர் | பிரியா மஹால், மல்லியங்கரணை, உத்திரமேரூர் |
| 12-09-2024 மாலை 4.00 மணி | காஞ்சிபுரம் மாநகரம் | AKG திருமண மண்டபம், காஞ்சிபுரம். |

எனவே சம்பந்தப்பட்ட மாநகரம் / ஒன்றிய / நகர / பகுதி / பேரூர் செயலாளர்கள், முறையாக கூட்ட அழைப்பிதழ்களை அச்சிட்டு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் பங்கேற்குமாறு கூட்டத்தை ஏற்பாடு செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.



வில்லிவாக்கம் சௌமிய தாமோதரப் பெருமாள் திருக்கோயிலில் 78வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு சிறப்பு வழிபாடு – பொது விருந்து நிகழ்ச்சியை அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் தொடங்கி வைத்து பொது மக்களுடன் அமர்ந்து உணவருந்தினார். இதில் 8வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், சுதா தீனதயாளன் எம்.சி., ஆ.குமரன், சு.நித்திய கலா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.